மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உதவி மருத்துவ அறுவை சங்கத்தினர் இப்படி ஒரு மருத்துவ ஆணைக்குழு நியமிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானத்தை அனுப்பியிருக்கிறார்கள். அப்படி அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் மருத்துவக் கல்வித் துறை, மருத்துவப் பணியாற்றும் குடும்பநலத் துறை, மருத்துவ பொது சுகாதாரத் துறை, மற்றும் தடுப்பு மருததுவத் துறை ஆகிய துறைகளில் இப்போது பணியில் இருப்பவர்கள் அல்லது ஓய்வுபெற்ற மூத்த அதிகாரிகள் இந்தக் குழுவிலே இருக்கவேண்டுமென்று அவர்களே இந்த விருப்பத்தைத் தெரிவித்து, தங்களுடைய சங்கத்தைச் சேர்ந்த ஒருவரையும் இந்தக் குழுவில் உறுப்பினராகவும் போடவேண்டும் என்றும், அதன் மூலமாக ஆய்வு செய்து, இந்த மருத்துவக் குழுவைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும், இதனால் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எனவே, இதைப் பற்றி ஆய்வு செய்து அனுப்ப வேண்டுமென்று அந்தந்தத் துறையைச் சார்ந்த இயக்குநர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. வந்ததற்குப் பிறகு, இன்னும் யார் யாரை இந்தக் குழுவிலே சேர்க்கலாம் என்பதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

செவிலியர் பணி முறை.

*வினா எண் 256— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மருத்துவ மனைகளிலும் மூன்று ஷிப்டு முறை (Three shift system) வேண்டும் என்று State Nurses Association அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) பயிற்சி பெற்ற செவிலியர்கள் போதிய அளவில் இல்லாமையாலும் இக்கோரிக்கை நிறைவேற்றப்பட மிகுந்த அளவில் பொருள் செலவு ஏற்படும் என்பதாலும் இக்கோரிக்கை தற்போது ஏற்கப்பட இயலாது என்று செவிலியர் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது.

1979 மார்ச்சு 6]

[முற்பகல் 9-50]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மருத்துவ மனைகளில் நர்சுகள் போதுமான அளவு இல்லையென்ற குறைபாடு நீண்ட காலமாக இருந்து வருகிறது. இதனால் அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக வருகிறது. அரசாங்கம் அவர்களுக்கு 8 மணி நேர வேலையை அமல் படுத்தும் வகையில் திட்டத்தை மாற்றி யமைத்து நர்சுகளுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: நான் அதற்காகத்தான் சொன்னேன். போதுமான அளவு பயிற்சி பெற்ற செவிலியர்கள் தற்போது இல்லை. மேலும் அத்தகைய திட்டத்தை நிலைப்படுத்த பொருள் செலவு அதிகமாகும். ஆகவே, தற்காலிகமாக அப்படிப்பட்ட ஆய்வு இல்லையென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. வெ. பாலகுரு: போதுமான செவிலியர்கள் படித்து தேர்ச்சி பெற்றவர்கள் இல்லையென்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னார்கள், செவிலியர்களுக்குப் பயிற்சி காலத்தில் வழங்கும் உதவித் தொகை போதுமானதாக இல்லை. உணவு வசதி போதுமானதாக இல்லையென்ற குறைபாடு இருப்பதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: செவிலி யர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது இடைக்காலத்தில் அந்தப் பயிற்சிக்கு எடுக்கப்படுகிற எண்ணிக்கை குறைக்கப் பட்டது. மீண்டும் இந்த அரசு ஏற்பட்ட பின்னால் அந்தப் பயிற்சிகால செவிலியர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. வருகிற நடப்பு ஆண்டிலிருந்து அதிகமான செவிலியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற முறையில் செவிலியர் பயிற்சி நிலையங்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டு அதிகமான செவிலியர்களுக்குப் பயிற்சி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை போதுமானதாக இல்லை, உணவு வசதி போதுமானதாக இல்லை என்ற குறைபாடும் அரசின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருக் கிறது. ஒரு நல்ல முடிவு இவர்களுக்குக் கிடைக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: செவிலியர் பணி என்பது மனிதாபி மானத்தோடு செயல்படும் பணியாகும். உலகம் பூராவும் யாருக்கும் எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை நேரம் இருக்கக் கூடாது என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட நியதி. 12 மணி நேர வேலை என்பது உண்மையில் மிகவும் மோசமானது. ஏற் கனவே செவிலியர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால்

செவிலியர் பயிற்சி கொடுக்கும்போது அதிகமான நபர்களை எடுத்து பயிற்சி கொடுத்து 8 மணி நேர வேலைத் திட்டத்தையும் அமல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : செவிலியர்கள் பணி எவ்வளவு பொறுப்பு வாய்ந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுக்குக் கொண்டு வந்தார்கள். பொறுப்பு வாய்ந்தது மட்டுமல்ல. தியாக உணர்வு வாய்ந்தது என்பதையும் எடுத்துக் கூற விரும்புகிறேன். செவிலியராகப் பணியாற்றிய காரணத்தால் விளக்கேந்திய சீமாட்டி என்ற பெயரில் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் பெயர் விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் துறையில் பல நல்ல முறைகளைச் செய்யவேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. எட்டு மணி நேர பணி முறையை அமல் படுத்த வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கந்தான். அந்த அளவுக்குத் தற்போது செவிலியர்கள் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. போதுமான செவிலியர்கள் பயிற்சி பெற்று வந்த பிறகு நாம் 8 மணி நேரவேலையை நிர்ணயிக்கக்கூடிய அளவுக்குப் பரிசீலிக்க முடியும்.

திரு. வி. கொ. சின்னசாமி : செவிலியர்களுக்கு மூன்று ஷிப்ட் முறையை ஏற்படுத்த வேண்டுமென்றால் பயிற்சி பெற்றவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தேர்ச்சி பெற்ற செவிலியர்கள் எத்தனை பேர் தேவைப் படுகிறார்கள் ? தற்சமயம் எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடுவார்களானால் விளக்கமாகப் பதில் சொல்ல இயலும்.

திரு. ப. சந்திரன்: மருத்துவ மனைகளில் தரைகளைச் சுத்தப்படுத்த, கழிவிடங்களைச் சுத்தப்படுத்த நியமிக்கப் பட்டிருக்கிற ஆட்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் காரணத்தால் செவிலியர்கள் அந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தும் நிலைமை இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? ஆகவே, அதிகப்படியான செவிலியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மருத்துவ மனைகளில் தரைகளைச் சுத்தப்படுத்த செவிலியர்களைப் பயன் படுத்துகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அத்தகைய முறையீடு இதுவரை எதுவும் வரவில்லை. தரையைச் சுத்தப்படுத்த ஷாப்லிங் என்று சொல்லக் கூடிய எம்.என்.ஓ.க்கள் என்று முன்பு இருந்தார்கள். இப்போது

1979 மார்ச்சு 6]

அவர்கள் எம்.என்.ஏ.க்கள் என்று மாற்றியமைக்கப்பட்ட காரணத்தால் சுப்பீரியர் சொர்வீஸ் என்ற முறையில் அந்தப் பணியைச் செய்யத் தயங்குகிறார்கள். பல இடங்களில் அதற்காக இன்று தனியாகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் செவிலியர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணிகளுக்கு அப்பாற்பட்ட 16 பணிகளைச் செய்யவேண்டுமென்றும், அதிலே இஞ்சக்ஷன் போடுவதும் ஒன்று என்றும், ஆகவே அதைத் தாங்கள் செய்யமுடியாது என்றும், அவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணிகளைத்தான் செய்வோம் என்றும் அவர்கள் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒரு இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதுமட்டுமல்ல. அதைப்பற்றி அவர்கள் அரசுக்கு மகஜர் அளித்திருக்கிறார்கள் என்பது தெரியுமா? அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, செவிலியர்கள் கொடுத்த அந்தக் கோரிக்கைகளின் மீது அரசு தாய் உணர்வோடு தங்களுடைய பரிசீலனையை நடத்திக்கொண்டிருக்கிறது. நல்ல முடிவு விரைவில் அறிவிக்கப்படும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, செவிலியர்லிபயிற்சி பெற்றவர்கள் போதுமான அளவிற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு இறுதிக்குள் வேலையில்லாத் திண்டாட்டம் நிறைய இருக்கும் என்ற காரணத்தால், அதிலும் படித்த பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஒரு 5 ஆயிரம் பேர்களை செவிலியர் பயிற்சிக்காக அனுப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பரந்த உள்ளத்தை நான் பாராட்டுகிறேன். ஆனாலும் ஒரே நேரத்திலே 5 ஆயிரம் பெண்களை செவிலியர் பயிற்சிக்குச் சேர்த்து பயிற்சி கொடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. பயிற்சி கொடுப்பதற்கு எவ்வளவு எண்ணிக்கை ஏற்புடையதோ அவ்வளவு எண்ணிக்கைதான் பயிற்சியளிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, தற்போது செவிலியர்கள் தங்களுடைய பணிகளைக் கவனிக்கிறபோது நோயாளிகளைக் கவனிப்பது மட்டும் அல்லாமல், அதைத் தொடர்ந்து அவர்கள் துணிகளை மாற்றுவதும் இதர வார்டு

களைக் கவனிப்பதும், வார்டுகளின் சௌகரியங்களைக் கவனிப்பதுமாகிய பணிகளிலே ஈடுபடுகிறார்கள். எனவே அவர்கள் நோயாளிகளை மட்டும் கவனிக்கின்ற பணியிலே ஈடுபடுத்தப்பட்டு மற்றப் பணிகளை மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற முறையிலே அவர்களுடைய பணிகளைக் குறைத்தால் நல்லது என்ற முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌளந்திரராஜன்: தலைவர் அவர்களே, செவிலியர்கள் ஆற்றவேண்டிய பணிகளை அவர்கள் ஆற்றுகிறார்கள். செவிலியர்களுக்குத் துணையாக அவர்களுக்கு உதவியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள்தான் அந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அந்தப் பணிகளையும் செவிலியர்கள் செய்துகொண்டிருக்கவில்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, நர்ஸ் களுக்கு 8 மணி நேரத்திற்கு மேல் வேலை கொடுக்கப்படுகிறது என்ற நிலைமை இருக்கிறது என்பது தெரிகிறது, ஆகவே அந்த 8 மணி நேரத்திற்கு மேலே அவர்கள் வேலைசெய்கிறபோது அதற்காக ஸ்பெஷல் அலவன்ஸ் அல்லது ஓவர் டைம் அலவன்ஸ் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, கேள்வி கேட்டு இருப்பவர் முன்னாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆவார்கள். அவர்களுக்கு இதுபற்றி நன்றாகப் புரியும் என்று கருதுகிறேன். அந்தக் காலத்திலேயிருந்து செவிலியர்கள் குறைபாடு இருந்துவந்திருக்கிறதே தவிர இந்த அரசு வந்ததற்குப் பிறகு வந்ததல்ல என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். செவிலியர்களுக்கு, அவர்களுடைய பணிகளுக்கு உரிய நல்ல நடவடிக்கையை எடுக்க அரசு முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றியங்களில் கால்நடைக் கண்காட்சிகள்.

*வினா எண் 257—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றிய அளவில் ஆண்டு தோறும் கால்நடைக் கண்காட்சிகள் நடைபெற்று வந்தது கைவிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?